மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலேயே குறிப்பிடப்பட்டு இருக்கிறது....... "True report"

திரு. ரா. உமாநாத் : True! True! Fairly true report அது இங்கேயும் அப்ளிகபிள். முந்திமாதிரி இங்கே தனிச் சட்டம் தேவையில்லை. பாரளுமன்றத்தில் தனிச்சட்டம் தேவையில்லை என்று சொல்லிதான்— பார்லிமென்ட்— அசெம்பிளி— இரண்டையும் கவர் செய்யும் வகையில் ப்ரீடம் ஹேஸ் பீன் கிவன். அது உங்களுடைய தீர்ப்பு மூலமாக பாதிக்கக் கூடாது.

They are on par with Parliament

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிச்சயம் பாதிக்காது. True report என்றால் Fairly True report என்றால் நிச்சயமாக பத்திரிகைகளுக்கு பாதகமாக இல்லாமல் அனுகூலமாக இருக்கும்.

5. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்பமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிந்துரை ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1979)

2. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1979)

3. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு) எண். 31/1979)

மேலும் தமிழ்நாடு சட்டமன்றமேலவையில், தமிழ்நாடு 1979–ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1979) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவரிமிடருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.